டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.02.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 207 - Madurai | Online Edition

# கிராமப்புற நிர்வாகத்தை மேம்படுத்த ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு ரூ.275 கோடி நிதி விடுவிப்பு

புது தில்லி, பிப்.27

ஜார்க்கண்ட் மாநிலத்தில் பஞ்சாயத்து ராஜ் மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக 2025-26-ம் நிதியாண்டில் 15-வது நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசு மாநிலத் தொகையாக 275.1253 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.

2024-25-ம் நிதியாண்டிற்கான ஒட்டு மொத்த மானியத் தொகையின் இரண்டாவது தவணையுடன் விடுவிக்கப்பட்டுள்ள இந்தத் தொகை மூலம் அம்மாநிலத்தில் உள்ள அனைத்து தகுதியுள்ள 24 மாவட்ட பஞ்சாயத்துகள் 253 தொகுதி பஞ்சாயத்துகள், 4342 கிராமப்புற பஞ்சாயத்துகள்.

மத்திய பஞ்சாயத்து ராஜ் மற்றும் ஜல்சக்தி அமைச்சகம் மூலம் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 15-வது நிதிக்குழுவின் மானியத் தொகைகளை பகிர்ந்தளிக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறது. பின்னர் அவை நிதியமைச்சகத்தால் விடுவிக்கப்படுகிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியங்கள் ஒரு நிதியாண்டில் 2 தவணைகளாக நிதிக்குழுவின் பரிந்துரைபடி விடுவிக்கப்படுகிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் 11-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29-வது பகுதியின் கீழ், சம்பளம் மற்றும் இதர நிர்வாக செலவுகளைத் தவிர அந்தந்த பகுதிகளில் உள்ள பஞ்சாயத்து ராஜ் மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணி களுக்காக பயன்படுத்தப்படும். அதே சமயத்தில் துப்புரவு மற்றும் திறந்தவெளிக் கழிப்பிடமில்லாத சூழலைப் பராமரித்தல், குடிநீர் வழங்கல், மழைநீர் சேகரிப்பு, நீர் மறுசுழற்சி போன்ற திட்டங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.

# எள் விதைப்பண்ணை அமைத்து இரட்டிப்பு லாபம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

சம்பா தாளடி நெற்பயிர்கள் அறுவடைக்குப்பின் எஞ்சிய மண்ணின் ஈரப்பதத்தை பயன்படுத்தி நெல் தரிசில் எண்ணெய் வித்துக்களை பயிரிடுவது மண் ஆரோக்கியத்தையும், விவசாயி களின் வருமானத்தையும் மேம்படுத்தவல்லது. நெல் தரிசு நிலங்களுக்கான முக்கிய எண்ணெய்வித்து பயிராக எள், அதிக நிகர வருமானம் மற்றும் நீர் பயன்பாட்டுத்திறன் ஆகியவற்றை வழங்கும் பயிராக அடையாளம் காணப்பட்டுள்ளது. தரமான விதையே தரணியாளும் என்பதற்கிணங்க தரமான எள் விதை களை உற்பத்தி செய்ய, எள்ளில் விதைப்பண்ணை அமைக்க, நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளை நாகப்பட்டினம் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் கேட்டுக்கொள்கிறார்.குறைந்த வயதில் (85 நாட்கள்), அதிக நீர் தேவையின்றி குறைந்த சாகுபடி செலவில் அதிக லாபம் ஈட்டக்கூடிய பயிர் எள்.

எள்ளில் அதிக மகசூல் பெற கீழ்க்கண்ட வழிமுறைகளை பயன் படுத்த வேண்டும்.

**இரகங்கள் :** TMV (SV) 7, TMV 4 ஆகிய இரகங்களை பயன்படுத்தலாம்.

**விதையளவு :** ஏக்கருக்கு 2 கிலோ

**நிலம் தயாரித்தல் :** நிலத்தை இருமுறை டிராக்டர் கலப்பையால் அல்லது மூன்றுமுறை இரும்பு கலப்பையால் அல்லது ஐந்து முறை நாட்டு கலப்பையால் உழ வேண்டும். சிறு விதைகளும் முளைக்குமாறு மண்ணிலுள்ள கட்டிகளை உடைத்து நுண்மை படுத்த வேண்டும். நெல் சாகுபடிக்குப் பிறகு எள் விதைக்கும் நிலமானது சரியான ஈரப்பதத்தில் ஒருமுறை உழுதபின், விதை விதைத்தப் பிறகு மற்றொரு உழவினால் மூட வேண்டும்.

**விதைக்கும் முறை :** நெல் தரிசில் விதைகளை வீசி விதைக்க வேண்டும். பின்னர் ஒரு சதுரமீட்டருக்கு 11 செடிகள் வீதம் பயிர் கலைத்தல் வேண்டும். கோடை பாசன நிலையில் எள் விதைப்ப தற்கு பிப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை உகந்த காலமாகும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

**ஊட்டச்சத்து மேலாண்மை :** ஏக்கருக்கு 5 டன் தொழுவுரத்தை கடைசி உழவிற்கு முன்பு இடவும். மண்பரிசோதனைபடி உரமிடுதல் சிறந்தது. அவ்வாறு செய்யாவிடில் பொதுவான பரிந்துரை யான, மானவாரி பயிருக்கு 9:5:5 கிலோ தலைமணி சாம்பல் சத்துக் களையும், இறவை பயிருக்கு 14:9:9 கிலோ தலைமணி சாம்பல் சத்துக்களையும் இட வேண்டும். எள் பயிருக்கு அனைத்து உரங் களையும் அடியுரமாக இட வேண்டும். ஏக்கருக்கு இரண்டு கிலோ மாங்கனீசு சல்பேட்டை மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். நுண்ணூட்டம் எள் மகசூலை அதிகரிக்கவும், எண்ணெய் சத்தை கூட்டவும் பயன்படுகிறது.

**நீர் பாய்ச்சுதல் :** விதை விதைத்தவுடன் ஒரு முறையும், 7ம் நாள் ஒரு முறையும், விதைத்த 25ம் நாள் ஒரு முறையும், பூக்கும் தருணம் ஒரு முறையும், காய் பருவத்தில் ஓரிரு முறையும் நீர் பாசனம் செய்ய வேண்டும்.

**களை கட்டுப்பாடு :** விதைத்த 15 நாட்கள் கழித்து கைகளையும், 35 நாட்கள் கழித்து 2வது கை களையும் எடுத்து களைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

**எள் பயிர் பாதுகாப்பு :** விதைத்த 20 நாளில் கொண்டைப்புழு தாக் குதல் தென்படும். இப்புழுக்கள் இலைகளை ஒன்றோடு ஒன்றாக பிணைத்து கொண்டு, அதில் இருந்து கொண்டு பூ, இளம் காய்கள் மற்றும் குருத்துக்களை உண்ணும். இதனை கட்டுப்படுத்த ஏக்க ருக்கு, வேப்பங்கொட்டை 6 கிலோவினை இடித்து 20 லிட்டர் நீரில் ஒரு நாள் ஊற வைத்து அதில் காதி சோப் சிறிதளவு ஒட்டுவதற்கு சேர்த்து, டேங்கிற்கு 1 லிட்டர் வீதம் 20 டேங்குகள் அடித்திட வேண்டும்.

**அறுவடைக்கான அறிகுறிகள் :** 1. செடியில் கீழிலிருந்து 25 சத இலைகள் உதிர்ந்துவிடும். 2. காய்கள் மற்றும் தண்டு பாகங்கள் பழுப்பு நிறமாக மாறும். 3. செடியின் அடியிலிருந்து மேலாக உள்ள 10வது காயில் விதைகள் கருப்பாக மாறியிருக்கும்.

மேற்கண்ட அறிகுறிகள் தென்படும்போது அறுவடை செய்துவிட வேண்டும். தவறினால், காய்கள் வெடித்துச்சிதறி மகசூல் மிகவும் குறைந்து போகும்.

நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள், எள் விதைப்பண்ணைகள் அமைத்து மேலேக்குறிப்பிட்டுள்ள தொழில்நுட்பங்களை கடை பிடித்து, குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்று பயனடைந்திடு மாறு, நாகப்பட்டினம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர், க.ஜெயபிரகாஷ் தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய அறிவியல் தினம் & பயோகான் கொரென்சா'26'




கோயம்புத்தூர், பிப்.27

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (TNAU), கோயம்புத்தூரில் உள்ள தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் (CPMB & B), தேசிய அறிவியல் தினம் & பயோகான் கொரென்சா'26 27.2.26 அன்று அண்ணா அரங்கத்தில் துவங்கியது.

இரண்டு நாள் நிகழ்வில் தேசிய அறிவியல் தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, இது 1928 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற சர் சி.வி.ராமனால் கண்டுபிடிக்கப்பட்ட ராமன் விளைவை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28 அன்று கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2015 முதல் தேசிய அறிவியல் தினத்தைக் கொண்டாடிவருகிறது. மேலும் பயோகான் கொரென்சா மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மை, புதுமை மற்றும் ஆராய்ச்சி கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க வருடாந்திர கல்வி நிகழ்வாக வளர்ந்துள்ளது. இந்த ஆண்டு தேசிய அறிவியல் தினம் & பயோகான் கொரென்சாவின் கருப்பொருள் 'அறிவியலில் பெண்கள் : பாரதத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது'. இந்தியாவின் அறிவியல் முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்வதிலும், வளர்ந்த மற்றும் தன்னம்பிக்கை கொண்ட தேசத்தை உருவாக்குவதில் பங்களிப்பதிலும் பெண் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புதுமைப்பித்தன்களின் முக்கிய பங்கை இந்த கருப்பொருள் வலியுறுத்துகிறது.

தொடக்க அமர்வு காலை 9.30 மணிக்கு தமிழ் தாய் வாழ்த்துடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து பி.டெனிா, ஞூஞூஞூ பி.டெக் (உயிரித் தொழில்நுட்பவியல்) வரவேற்பு உரை நிகழ்த்தினார்.

குத்துவிளக்கு ஏற்றி சிறப்பு விருந்தினர்கள் விழாவை துவங்கி வைத்தனர். முனைவர் ந.செந்தில், இயக்குனர் (CPMB&B), அறிமுக உரையை நிகழ்த்தி, விவசாய முன்னேற்றம், உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சிமற்றும் தேசிய வளர்ச்சியில் அறிவியலின் முக்கியத்து வத்தை எடுத்துரைத்தார். தேசிய அறிவியல் தினம் & பயோகான் கொரென்சா'26 இளம்மனங்களை அறிவியல் சிறப்பையும் புது மையையும் நோக்கி ஊக்குவிக்கும் ஒரு தளமாக செயல்படுகிறது என்பதை அவர் வலியுறுத்தினார். பயோகான் கொரென்சா'26 பதாகையை மூன்றாம் ஆண்டு உயிரித்தொழில்நுட்பவியல் மற்றும் உயிரித்தகவலியல் மாணவர்களால் வெளியிடப்பட்டது.

# நெல் துளைப்பானை கட்டுப்படுத்தும் முறை குறித்து விளக்கம் அளித்த வேளாண் மாணவி!



தேனி, பிப்.27

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட உ.அம்மாப்பட்டி ஊராட்சியில் இருக்கும் அம்பாசமுத்திரம் கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மாணவி கே.பத்மாவதி, தனது கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் நெற்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காக, நெல் துளைப்பான் கட்டுப்படுத்தும் முறையை பயிற்சி விளக்கமாக எடுத்துரைத்தார்.

**உயிரியல் கட்டுப்பாடு :** டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2CC வீதம் மூன்று முறை, நடவு செய்த 30,37,44 வது நாட்களில் பயன்படுத்தலாம்.

**இயந்திர கட்டுப்பாடு :** ஆண் அந்துபூச்சிகளை கவர்ந்து அழிக்க இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 5-7 என்றளவில் பயன் படுத்தலாம் மற்றும் ஒரு ஏக்கருக்கு ஒன்று என்ற வீதத்தில் ஒளிப் பொறிகளைப் பயன்படுத்தலாம். பாதிக்கப்பட்ட காய்ந்த குருத்து களை அகற்றுதல், நாற்றுகளின் நுனியை நறுக்கி நடவு செய்தல் போன்ற சாகுபடி முறைகளை எடுத்துரைத்தார். தேவைப்பட்டால் வேப்ப எண்ணையை 3-5 மி.லி/ லிட்டர் வீதத்தில் தெளிக்கலாம். சேதத்தின் அளவு ஐந்து சதவீதத்தை தாண்டினால் குளோரி பைரிபாஸ் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு போன்ற பரிந்துரைக்கப் பட்ட பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம். இவை மட்டுமின்றி, கண்காணிப்பு மற்றும் ஆரம்பகால கண்டறிதல் போன்ற பிற மேலாண்மை நுட்பங்களையும் விளக்கமாக எடுத்துரைத்து விவசாயிகளுக்குகுமாணவி கே.பத்மாவதி.

# சென்னை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இணை இயக்குநர் ஆய்வு

திருச்சி, பிப்.27

சென்னை, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இணை இயக்குநர் சு.சாந்தி 27.02.26 அன்று திருச்சிராப்பள்ளி விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள்.




திருச்சிராப்பள்ளி விதைப்பரிசோதனைக்கு வரப்பெறும் விதை மாதிரிகளில் விதைகளின் முளைப்புத்திறன் சோதனை, ஈரப்பத சோதனை, புறத்தூய்மை சோதனை மற்றும் பிறரக கலப்பு விதைகளை கண்டறியும் சோதனை முறைகள் எவ்வாறு செயல் படுத்தப்படுகிறது என்ற விவரத்தினை ஆய்வு மேற்கொண்டார்கள்.

திருச்சிராப்பள்ளி விதைபரிசோதனை நிலையத்தின் இலக்கு மற்றும் சாதனை குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். திருச்சி விதைப்பரிசோதனை நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விதைப்பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ் விளக்கி கூறினார். விதைபரிசோதனை நிலையத்தில் விதை முளைப்புதிறன் அறையை பார்வையிட்டு, கிடைக்கப் பெற்றுள்ள விதை மாதிரிகளிலிருந்து முளைப்புத்திறன் கணக்கிடும் முறையில் இயல்பான நாற்று, இயல்பற்ற நாற்று, கடின விதை மற்றும் உயிர்ப்பற்ற விதைகள் பகுப்பாய்வு செய்யும் முறையை பார்வையிட்டார்கள்.

திருச்சி விதைபரிசோதனை நிலையத்தில் இதுவரை சான்று விதை மாதிரிகள் 844 எண்களும், ஆய்வாளர் விதை மாதிரிகள் 1359 எண்களும், பணி விதை மாதிரிகள் 1933 எண்களும், ஆக மொத்தம் 4136 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதில் 183 விதை மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளன.

இந்நிலையத்திற்கு வரும் விதை மாதிரிகளை சீரிய முறையில் பகுப்பாய்வு செய்து தரமான விதைகளே விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். ஆய்வின் போது, திருச்சிராப்பள்ளி விதைபரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ், வேளாண்மை அலுவலர் ந.சி.அனிதா மற்றும் இரா.புவனேஸ்வரி ஆகியோர் உடனிருந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய வல்லுநர் விதை உற்பத்தி திடலில் கண்காணிப்புக்குழு ஆய்வு




ஈரோடு, பிப்.27

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொரு ஆண்டும் உயர் விளைச்சல் இரகங்கள் கண்டறிந்து வெளியிட்டு வருகின்றது. அவ்வாறு வெளியிடப்பட்ட உயர் விளைச்சல் இரகங்களின் கருவிதைகளைக் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் விதைப்பண்ணைகள் அமைத்து வல்லுநர் விதை உற்பத்தி செய்து மாநில அரசு விதைப்பண்ணைகளுக்கு விதைப் பெருக்கத்திற்க்காகவும் விவசாயிகளுக்கு சாகுபடிக்காகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அமைக்கப்படும் விதைப்பண்ணைகளை ஆய்வு செய்து தரத்தினை துல்லியமாக கடைபிடித்து தரமான விதைகளை உற்பத்தி செய்வதை உறுதி செய்திடும் பொருட்டு வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு இக்குழுவானது விதைப்பயிர் பூப்பருவம், அறுவடைப் பருவம் மற்றும் விதைக்குவியல் விதை சுத்தி ஆகிய நிலைகளில் ஆய்வு செய்து விதைத் தரத்தினை உறுதி செய்கின்றது.

இந்நிலையில் பாவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடப்பு பருவத்தில் நெற்பயிரில் புதிய மத்திய இரகமான ஏடீடி 45 (3.5 ஏக்கர்), ஏடீடி (ஆர்) 59 (2.5 ஏக்கர்), மக்காச்சோளம் – வி ஐ எம் - 419, உளுந்து வி பி என்-9 (2.5 ஏக்கர்), வி பி என்-10 (3 ஏக்கர்), நிலக்கடலை விஆர்ஐ - 10 - (3.28 ஏக்கர்) ஆகிய ரகங்கள் வல்லுநர் நிலை விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு விதைப்பயிர் பூக்கும் பருவம் மற்றும் அறுவடை நிலையில் உள்ளது. இவ்விதைப் பண்ணைகளை பாவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சண்முகம், உதவி பேராசிரியர்கள் சசிகலா, உத்தராசு, ஈரோடு, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் சத்தியராஜ் மற்றும்

பவானிசாகர் விதைச்சான்றளிப்பு அலுவலர் ஜெயக்குமார் மற்றும் மாரிமுத்து அடங்கிய வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு ஆய்வு செய்தது.

ஆய்வின் போது விதைப்பயிர் நடவு முறை, விதைப்பயிரில் பிற இரக கலவன்கள், பயிர் விலகு தூரம், குறித் தறிவிக்கப்பட்ட நோய்கள் போன்றவற்றையும் ஆய்வு செய்தனர். மேலும் தரமான வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்திட தேவை யான அனைத்து நடைமுறைகளையும் கடைபிடிக்க களப்பணி யாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## மூத்த பெண் விவசாயிக்கு தனித்துவ அடையாள எண் வேளாண்மைத் துறை மூலம் வழங்கல்

மதுரை, பிப்.27

மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்கும் தனித்துவ அடையாள எண் பெறுவதற்கு தற்போது பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மதுரை கிழக்கு வட்டாரம் அழகு நாச்சியபுரத்தை சேர்ந்த 86 வயது மூத்த பெண் விவசாயிக்கு அடையாள எண் இன்று வழங்கப்பட்டது.

எனவே அனைத்து விவசாயிகளும் தவறாது வேளாண்மைத் துறையை அணுகி மத்திய அரசு வழங்கும் அடையாள எண் பெற்று பயன் பெற விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மதுரை மாவட்டத்தில் மொத்தமுள்ள 1,25,072 விவசாயிகளில் இதுவரை 92,769 விவசாயிகள் மட்டுமே தனித்துவ அடையாள எண் பெற்றுள்ளனர். மீதமுள்ள 32,303 விவசாயிகள் இன்று நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு பதிவேற்றம் செய்திட வேண்டும் என கே.பி.முருகேசன், வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

விவசயகள் தனித்துவ அடையாள எண் பெற்று இருந்தால் மட்டுமே மான்ய திட்டங்கள், மான்ய உரங்கள் பெற முடியும். பதிவு செய்வதற்கு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள், பொது சேவை மையம், இ–சேவை மையத்தினை அணுகலாம்.

பிரதம மந்திரி கிசான் திட்டத்தில் பயன் பெறும் விவசாயிகள் கட்டாயம் பதிவு செய்து இருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் கௌரவ நிதி நிறுத்தம் செய்யப்படும். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குநர்கள் கோ.பரமேஸ்வரன், ப.பாலமுருகன் வேளாண்மை அலுவலர்கள் மூர்த்தி, பாரதி கலந்து கொண்டனர்.

# கேவிகேயில் எண்ணெய் வித்துப் பயிர்களில் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி



கடலூர், பிப்.27

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ஆத்மா திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் (23.02.26 முதல் 25.02.26) ஆகிய 3 நாட்கள் எண்ணெய் வித்துப் பயிர்களில் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி வழங்கப் பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் க.நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்து, மேலும் எண்ணெய் வித்துப்பயிர்களில் புதிய இரகங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார், மற்றும் மணிலா, எள், ஆமணக்கு ஆகிய பயிர்களின் முக்கிய இரகங்கள் மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றி தெளிவாக விளக்கினார்.

முனைவர் க.கலைச்செல்வி (உழவியல்), தொழில்நுட்ப உரையில் எண்ணெய் வித்துப் பயிர்களில், ஆமணக்கு பயிரில் உள்ள உழவியல் தொழில்நுட்பங்கள் களை மேலாண்மை, உரம் மற்றும் சாகுபடி குறிப்புகள் பற்றி விரிவாக எடுத்துரைத் தார். இணைப்பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகுமார் (நூற் புழுவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு எடுத் துரைத்தார். பேராசிரியர் முனைவர் சு.கண்ணன் (உணவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் மதிப்புகூட்டுதல் பற்றி தெளிவாக விளக்கினார். இணைப்பேராசிரியர் முனைவர் சத்திய நாரயணன் (பயிர் மரபியல் துறை), புதுக்கூரப்பேட்டையில் உள்ள புதிய பண்ணையில் நிலக்கடலை, எள் பயிரை நேரில் பார்வையிட்டு, புதிய இரகங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்து, மேலும் விவசாயிகள் தனது ஐயங்களை தெளிவுபடுத்தி கொண்டனர்.

குமார் (பண்ணை மேலாளர்) மற்றும் மீனலட்சுமி (தொழில் நுட்ப அலுவலர்) வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உள்ள மாதிரி திடல்கள் பற்றியும் அதன் செயல்விளக்கங்கள் மற்றும் பலா, முந்திரியில் ஒட்டுக்கட்டும் முறை பற்றியும் மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றியும் தெளிவாக விளக்கினார்.

இப்பயிற்சியில் சாமுண்டீஸ்வரன், பவானி, விஷ்ணுப்பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் இப்பயிற்சியில் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# ஸ்பிருலினா - ஒரு செல் புரத பாசி



ஸ்பிருலினா (சுருள்பாசி– SPIRULINA) என்பது மிகப் பழமையான, இயற்கையான ஒரு செல் புரத பாசி வகையைச் சேர்ந்தது. இது உலக ஊட்ட சத்து வல்லுனர்களால் அங்கீ கரிக்கப்பட்ட அனைத்து வயதினருக்கும் ஏற்ற சிறந்த சைவ புரத ஊட்டசத்து உணவாகும். (FOOD SUPPLEMENTS) மற்றும் நாசாவினால் விண்வெளி பயணத்திற்கு ஏற்ற உணவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஸ்பிருலினாவில் சத்துகள் என்ன என்ன?**

60% புரத சத்து, வைட்டமின்கள் B.A.E.K, 16 வகை அமினோ அமிலங்கள், கனிம சத்துகள் (கால்சியம், பொட்டாசியம் சோடியம் சிங்க் தாவர ஊட்டசத்து (CHLOROPHYLL, PHY CO-CYANIN இது நீலபச்சைபாசி வகையை சேர்ந்தது.

**ஸ்பிருலினா வளர்ப்பு**

இது வெளிநாடுகளில் தான் வளர்க்க படுகிறது இது வளர்ப்பதற்கான சூழ்நிலைகள் நல்ல சூரிய ஒளி, கரிம சத்துகள், உப்புநீர் பை கார்பேனட், கரியமில வாயு தேவை. அகலமான ஆழம் குறைவான தொட்டிகளில் கழிவுநீரை நிரப்பி அதை அடிக்கடி கலக்கி விட வேண்டும். அது வெயிலில் சூடாகப்பட்டு சீரமைக்கபடும். 24மணி நேரத்துல கரிம கூட்டுப் பொருளும், கரியமில வாயும் தோன்றும் பண்னனை கழிவு கரைசலை பயன்படுத்த லாம். இது வெப்ப பிரதேசங்களில் தான் வளரும். தமிழகத்தின் தென்பகுதி கரையோரப்பகுதில் வளர்க்கப்படுகிறது.

**ஸ்பிருலினாவை சாப்பிடுவதால் உடலுக்கு கிடைக்க கூடிய நன்மைகள்**

1) உடலில் உள்ள தேவையற்ற நச்சுக்கழிவுகளை வெளியேற்ற உதவுகிறது.

2) செயல்திறனை ஊக்குவிக்கிறது.

3) மூளைத்திறன் மற்றும் அறிவாற்றலை அதிகரிக்க உதவுகிறது.

4) செரிமானத்தை ஊக்குவித்து மலச்சிக்கலை தடுக்க உதவுகிறது.

5) இரும்பு சத்து குறைபாட்டை தடுக்க உதவுகின்றன.

6) கேன்சர் நோயை எதிர்க்கும் திறனை அதிகரிக்க உதவுகிறது.

தினசரி வாழ்வில் ஏன் இந்த ஸ்பிருலினா சாப்பிட வேண்டும்?

இன்றைய அவசர வாழ்வில் நாம் உண்ணும் உணவில் நம் உடலுக்கு தேவையான சத்துகள் கிடைப்பதில்லை. அக்குறையை நீக்கி நம் உடலுக்கு தேவையான அனைத்து சத்துகள் தரக்கூடிய பக்க விளைவுகள் இல்லாத போது சிறந்த ஊட்டசத்து உணவாக ஸ்பிருலினா உள்ளது. இது மனித உடலுக்கு பாதுகாப்பு கவசமாக இருக்கிறது.

**எடுத்துக்கொள்ளுவது எப்படி?**

ஸ்பிருலினா பொடி – காலை, மாலை உணவுடன் 2 கிராம் அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். மாத்திரை வடிவிலும் உட்கொள்ளலாம். வேறு மாத்திரை உட்கொள்பவர்கள் தங்களுடைய மருத்துவரின் ஆலோசனைபடி எடுத்துக் கொள்ள வேண்டும். குறைந்த செலவில் நிறைய ஊட்ட சத்துகள் நிறைந்த ஸ்பிருலினாவை எடுத்துக் கொள்ளலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் சார்பில் சிறு தானியங்கள் குறித்த கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி



சேலம், பிப்.27

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தை சேர்ந்த 50 விவசாயிகள் அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான கண்டுணர்வு பயணத்திற்கு பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் சார்பில் சிறுதானிய கருத்தரங்கு மற்றும் கண்காட்சிக்கு புதிய தொழில்நுட்பங்களை நேரில் கண்டு வர அழைத்துச் செல்லப்பட்டனர்.

விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் எம்.பி.க்கள் சிவலிங்கம், மலையரசன், மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கமலம், வேளாண்மை துணை இயக்குனர்கள் கண்ணன், நீலாம்பாள், அருணா, சித்ரா மற்றும் உதவி இயக்குனர்கள், வேளாண்மை அலுவலர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிறுதானியங்களில் ரொட்டி, பிஸ்கட், ரஸ்க்,முறுக்கு, அதிரசம், ராகி சேமியா, ராகி நூடுல்ஸ், ராகி இடியாப்பம் ,கம்பு பிஸ்கட், கம்பு உருண்டை போன்று மதிப்பு கூட்டி தயாரித்து அதிக லாபம் பெறுவது குறித்து நேரில் கண்டு அறிந்தனர். மேலும் சிறு தானிய கருத்தரங்கில் கலந்துகொண்டு வேளாண் விஞ்ஞானி களிடம் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து சந்தேகங்களை கேட்டு தெளிவுப்பெற்றனர்.

இந்த பயிற்சிக்கு வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி, உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்செல்வி ஆகியோர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர் என்று அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப. சண்முகப்பிரியா தெரிவித்துள்ளார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறைக்கு ISO 17065 : 2012 தரச்சான்றிதழ் பயிற்சி



திருச்சி, பிப்.27

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறை சார்பில் தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்பு துறைக்கு ISO 17065 : 2012 தரச் சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றழிப்பு உதவி இயக்குநர்கள், விதைச் சான்று அலுவர்கள், உயிர்மச்சான்று ஆய்வாளர்களுக்கு 26.02.26 அன்று பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிமச் சான்றளிப்பு இணை இயக்குநர், எஸ்.சாந்தி, சென்னை தலைமையில், திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா முன்னிலை வகிக்க நடத்தப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் என்.கண்ணன் மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் தர மேலாளர் எம்.ஜோதிலட்சுமி, ISO 17065 : 2012 தரச்சான்றிதழ் பெறுவதின் நோக்கமும் அதன் நன்மைகள் பற்றியும் சிறப்புரை ஆற்றினார்கள். தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றம் வேளாண் ஏற்றமதி மேம்பாட்டு கழகம் (TNAPEx) சார்பாக மூத்த ஆலோசகர் டீ.கௌதம், உயிர்ம விளைபொருளுக்கான உள்நாட்டு சந்தை வாய்புகள் மற்றும் ஏற்றுமதி வாய்புகள் பற்றி எடுத்து கூறினார். உயிர்ம விளைபொருட்களில் சந்தைப்படுத்து தலில் உள்ள சிரமங்கள் பற்றியும், தனது நிறுவனம் விற்பனை யாளர் மற்றும் நுகர்வோரை ஒருங்கிணைத்து வணிகத்திற்கான வாய்ப்புகளை எவ்வாறு வழங்குகிறது என்பது பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் உணவு பாதுகாப்பு துறை ( *fssai* ) மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஜெகதீஸ் சந்திரபோஸ் மற்றும் திருச்சி மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்சியில் உணவு பாதுகாப்பு துறையின் செயல்பாடுகள் மற்றும் கலப்பட உணவினை தடுப்பதற்காக துறை மேற்கொள்ளும் நடவடிக்கைகள், கலப்பட உணவு குறித்து நுகர்வோர் எவ்வாறு இணையதளம், வாட்ஸ்சப் செயலி மூலம் புகார் அளிப்பது குறித்து விரிவாக எடுத்து கூறினார்கள். சந்தையில் உயிர்ம பொருட்கள் என விற்கப்படும் பொருட்களில் அதன் உண்மை தன்மையை பரிசோதிக்க மாதிரிகள் எடுக்கப்படுவது பற்றியும், உண்மை நிலை மாறும் பட்சத்தில் தண்டணை விவரங்கள் பற்றியும் எடுத்து கூறினார்கள்.

ISO 17065 : 2012 தரச்சான்றிதழ் பற்றி முனைவர் எஸ்.முத்துகுமார், உயிர்ம வேளாண்மை உணவு மற்றும் ஜவுளி அங்கீகார ஆலோசகர் இத்தரச்சான்றிதழ் பெறுவது பற்றிய நடைமுறைகளை எடுத்து கூறினார்கள். ISO 17065 : 2012 சான்று என்பது நமது சான்றளிப்பு முகமையின் திறன் பற்றி கூறுவதாகும். எவ்வாறு திறமையாக சான்று செய்கிறோம், எவ்வாறு பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது மற்றும் நாம் சான்று செய்த பொருளில் எஞ்சிய நச்சு இல்லாமல் இருத்தல் போன்றவை கருத்தில் கொண்டு ISO 17065 : 2012 தரச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மேலும் இந்த தர நிர்ணயம் நுகர்வோர், தொழில்துறையினர் மத்தியில் நம்முடைய தமிழ்நாடு உயிர்மச்சான்றளிப்பு முகமையின் நம்பகத்தன்மையை அதிகரிக்கச் செய்யும். உற்பத்தி பொருளின் மீதான நம்பிக்கையை கொடுகின்றது. தமிழ்நாடு உயிர்மச்சான்றளிப்பு துறைக்கு தனித்துவ அடையாளத்தை தருகிறது. சர்வதேச சந்தையில் நமது துறை முக்கியத்துவத்தை பெறமுடியும் என்பதை கூறினார்கள்.

இப்பயிற்சியில் திருச்சி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி வரவேற்புரை வழங்கி பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து கூறினார்கள். பயிற்சியின் நிறைவாக உயிர்மச்சான்று ஆய்வாளர் ந.சபாபதி நன்றியுரை கூறினார்கள்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சிறுதானிய திருவிழாவில் உயிர்ம வேளாண்மைக்கான வாய்ப்புச் சான்றிதழ் சுற்றுலாத்துறை அமைச்சர் வழங்கினார்




சேலம், பிப்.27

சேலம் மாவட்ட அளவிலான சிறுதானியத் திருவிழாவில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் சார்பாக அமைக்கப்பட்ட கருத்துக் காட்சி அரங்கில் சான்றுப் பெற்ற விதைகள் பயன்படுத்துவதன் முக்கியத்துவம், சிறுதானிய பயிர்களில் விதைப்பண்ணை அமைத்தல், சேலம் மாவட்டத்திற்கு ஏற்ற சிறுதானியப் பயிர்களான சாமை, திணை, வரகு, குதிரைவாலி, பணிவரகு, ராகி, கம்பு, சோளம் ஆகியவற்றில் அதிக மகசூல் வழங்கக்கூடிய இரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. விதைப் பரிசோதனை நிலையம் சார்பாக விதைப்பரிசோதனையின் அவசியம், விதைப்பரிசோதனை முறைகள் காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும், உயிர்மச்சான்றுப் பெறுவதற்கான வழிமுறைகள், உயிர்மச்சான்று பெற்ற விளைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. தேசிய இயற்கை வேளாண்மை திட்டத்தின் சார்பாக பதிவு செய்துள்ள குன்னூர் இயற்கை வேளாண்மை குழுவிற்கும், தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தின் சார்பாக பதிவு செய்துள்ள சரவணன், கீரிப்பட்டி, உயிர்ம வேளாண்மைக்கான வாய்ப்புச் சான்றிதழை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்.

இங்கு அமைக்கப்பட்ட கருத்துக்காட்சி அரங்கினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.மலையரசன், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எ.பி.ஜெயசங்கரன் உட்பட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகள் அனைவரும் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வின் போது சேலம் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அ.நவநீத கிருஷ்ணன், வேளாண்மை அலுவலர் (விதைப்பரிசோதனை நிலையம்) பெ.கவிதா, விதைச்சான்று அலுவலர் ப.கௌரிசங்கர், வே.மணிமொழி ஆகியோர் உடனிருந்தனர்.

# வாழைத் தோட்டத்தில் வாழைக் குலை ஊட்டம் குறித்த நேரடி விளக்கப் பயிற்சி

மதுரை, பிப்.27

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டாரத்தில் நடைபெற்று வரும் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, செல்லம்பட்டி குழுவைச் சேர்ந்த விவசாய கல்லூரி மாணவி ஹர்ஷிதா.வீ வாழை பயிரில் "Bunch Feeding' வாழைக் குலை ஊட்டம் தொழில்நுட்பம் குறித்து நேரடி விளக்கப் பயிற்சி நடத்தினார்.






இந்த நிகழ்வில் 6 விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, வாழை கொத்து உருவாகும் நிலையில் செய்யப்படும் இம்முறையை செயல் விளக்கமாக கற்றுக் கொண்டனர். கொத்தின் வளர்ச்சியை அதிகரிக்க தேவை யான ஊட்டச் சத்து கலவை தயாரிக்கும் முறை, அதனை பாலிதீன் கவரில் நிரப்பி கொத்துக்கு வழங்கும் நடைமுறை, பயன்படுத்தும் அளவு மற்றும் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாணவி தெளிவாக விளக்கினார்.

இந்த முறையின் மூலம் கொத்தின் எடை அதிகரிப்பு, பழங்களின் அளவு ஒரே மாதிரியாக இருப்பது, தரமான மகசூல் மற்றும் அதிக வருமானம் பெறுதல் போன்ற பலன்கள் கிடைக்கும் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் முடிவில், இத்தகைய பயிற்சிகள் கிராம விவசாயி களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

## சோளப் பயிரில் வேப்ப எண்ணெய் பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்துதல் குறித்து எடுத்துரைத்த வேளாண் மாணவர்



மதுரை, பிப்.27

வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையை சேர்ந்த நான்காம் ஆண்டு படிக்கும் மாணவன் கா.சஞ்சய் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE 2025-26 ) ஒட்டன்சத்திரம் குழு நடத்திய சோளப் பயிரில் வேப்ப எண்ணெய் (Neem Oil) பயன்படுத்துவது படைப்புழு, அசுவினி போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒரு சிறந்த இயற்கையான வழியாகும். 5-10 மில்லி வேப்ப எண்ணெயை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து, சிறிது சோப்பு நீர் (Emulsifier) சேர்த்து நன்கு கலந்து, இலைகளின் அடிப்பகுதியிலும் தண்டுப்பகுதியிலும் படும்படி தெளிக்க வேண்டும்.

# விவசாயிகளிடையே TNAU AAS செயலி குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி




கோயம்புத்தூர், பிப்.27

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் (TNAU) பயிலும் இறுதி ஆண்டு மாணவிகள், கிராமப்புற விவசாயிகளிடையே வேளாண் தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்தும் நோக்கில் TNAU AAS (Automated Agro Advisory Service) செயலி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை கிராமத்தில் நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியில், TNAU AAS செயலியின் மூலம் விவசாயிகள் தினசரி வானிலை முன்னறிவிப்பு, பயிர் சார்ந்த ஆலோசனைகள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, உர மேலாண்மை, நீர் மேலாண்மை உள்ளிட்ட முக்கிய தகவல் களை தங்களது கைபேசியின் மூலம் பெற முடியும் என்பது விளக்கப்பட்டது.

மேலும், காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் அபாயங் களை எதிர்கொள்ள, இந்த செயலி விவசாயிகளுக்கு எவ்வாறு உதவியாக இருக்கும் என்பதையும் எடுத்துரைத்தனர். செயலியை பதிவிறக்கம் செய்வது குறித்தும், பயன்படுத்தும் முறை மற்றும் அதனுடைய பயன்கள் குறித்தும் நேரடி விளக்கம் அளிக்கப்பட்டது. RAWE (Rural Agricultural Work Experience)-Village Stay Programme திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இந்த செயலி விவசாயத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்ததுடன், இதுபோன்ற தொழில்நுட்ப அடிப்படையிலான முயற்சிகள் கிராமப்புறங்களில் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர். இந்நிகழ்ச்சி, விவசாயி களுக்கும் அறிவியல் தொழில்நுட்பங்களுக்கும் இடையிலான இடைவெளியை குறைக்க ஒரு முக்கிய முயற்சியாக அமைந்தது. இந்நிகழ்வில் மாணவிகள் வர்சா.ச, வர்சா குமாரி.க, வர்சா பார்த்திபன், வித்யா.க, வித்ய சரண்யா.த, வினோலின் ரத்னா.ரா, விஷ்மா.மா.சி, விஷ்ணு பிரியா.செ, யுவ பிரியா.த, யுவ ஸ்ரீ.பீ பங்கேற்றனர்.

# முருங்கை விவசாயிகளுக்கு 'ஒளிப்பொறி' செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



திண்டுக்கல், பிப்.27

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியம் பள்ளபட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவியின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் செயல்முறை விளக்கம் நடைபெற்றது.

இம்முகாமில் வேளாண் மாணவி ஐஸ்வர்யா நாயர், முருங்கை சாகுபடியில் பெரும் சவாலாக இருக்கும் லெபிடோப்டிரான் (Lepidopteran) இனப் பூச்சிகளைக் கட்டுப் படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

குறிப்பாக, ரசாயன பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக, எளிய முறையில் பூச்சிகளைக் கவரக்கூடிய ஒளிப்பொறி (Light Trap) கருவியின் பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

**பயிற்சியின் சிறப்பம்சங்கள்**

முருங்கையில் இலைப்பேன் மற்றும் புழுக்களின் தாக்குதலை ஆரம்பகட்டத்திலேயே கண்டறிதல். இரவு நேரங்களில் ஒளிப் பொறியைப் பயன்படுத்தி தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிப்பதன் மூலம் புழுக்களின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துதல். குறைந்த செலவில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி, நஞ்சில்லா முருங்கை விளைச்சலைப் பெறுதல்.

இந்தச் செயல்முறை விளக்கத்தின் போது, ஒளிப்பொறியை எவ்வாறு வயல்களில் பொருத்த வேண்டும் மற்றும் அதனைப் பராமரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்குத் தெளிவு படுத்தப்பட்டது. இதில் பள்ளபட்டி கிராமத்தைச் சேர்ந்த முருங்கை விவசாயிகள் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தாளவாடியில் பட்டு நூற்பாலை தொழிற்சாலைகளில் பயிற்சிப் பெற்ற பட்டுப்புழுவியல் மாணவர்கள்



ஈரோடு, பிப்.27

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப் பாளையம், பட்டுப் புழுவியல் துறையில் இளம் அறிவியல் (மேதமை) பட்டுப்புழுவியல் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் ரா.செ.கரிஷ்கரன், ர.ஜீவன்பாலாஜி, மு.மணிகன்டன், ச.மனோஜ்குமார், து.மோகன் குமார், வே.பிரகாஷ்ராஜ், சா.விஷ்ணுகுமார், ச.முசாரப்கான் ஆகியோர் ஊரக பட்டுப் புழுவியல் பணி அனுபவத் திட்டத்தின் (RSWE) கீழ் இரண்டு மாத காலம் ஈரோடு மாவட்டத்தில், கோபி செட்டிபாளையம் பகுதியில் பட்டு வளர்ச்சித் துறையில் பயிற்சி திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளை சந்தித்தல், பட்டு வளர்ப்பு தொழில் நுட்பங்களை செயல்முறை விளக்கம் அளித்தல், பட்டு வளர்ச்சித் துறை அலுவலகங்களுக்கு சென்று அங்கு நடக்கும் செயல்பாடு களில் பங்கேற்று கற்றறிதல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs) மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் (NGOs) செயல்பாடுகளில் பங்கேற்றல் முதலிய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாவட்டத்தில்உள்ள தாளவாடி பகுதியில் அமைந்துள்ள அரசுபட்டு நூற்பாலை,பலமுனை பட்டு நூற்பாலைகள், பட்டு நூல் முருக்காலைகள் மற்றும் தானியங்கி பட்டு நூற்பாலை ஆகிய இடங்களில் மூன்றுநாட்கள், தொழிற் சாலை திறன் மேம்பாட்டு பயிற்சிப் பெற்றனர். இதன் மூலம், இந்த தொழிற்சாலைகளின் தினசரி செயல்பாடுகளில் பங்கேற்று பயிற்சி பெற்றனர். மேலும், இந்த நூற்பாலைகளின் செயல்பாட்டுத் திறன் மற்றும் வரவு, செலவு கணக்குகளையும் கேட்டறிந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தென்னை மரங்களில் தாக்கம் ஏற்படுத்தும் ரைனோசெரஸ் வண்டை கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் மாணவி



தேனி, பிப்.27

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் மாணவி, தனது RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக தேனி மாவட்டம், பொட்டல்களம் கிராமத்தில் தென்னை மரங்களில் தாக்கம் ஏற்படுத்தும் ரைனோ செரஸ் வண்டை கட்டுப்படுத்த வேம்பு பிண்ணாக்கு பயன்பாடு குறித்து விளக்கக் காட்சி நடத்தினார்.

தென்னை மரத்தின் மையப் பகுதியைத் தாக்கி இலைகளில் சேதத்தை ஏற்படுத்தும் ரைனோசெரஸ் வண்டை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாமல் கட்டுப்படுத்த வேம்பு பிண்ணாக்கு ஒரு சிறந்த இயற்கை முறையாகும் என்று மாணவி விளக்கினார். இதற்காக வேம்பு பிண்ணாக்கு அல்லது வேம்பு விதை பொடியை மணலுடன் சம அளவில் கலந்து கொள்ள வேண்டும். பின்னர் அந்த கலவையை 150 முதல் 200 கிராம் வரை அளந்து, தென்னை மரத்தின் உச்சிப் பகுதியில் உள்ள உள்ளக 2 முதல் 3 இலைக் கீல் பகுதிகளில் இட வேண்டும். குறிப்பாக மே, செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இந்த முறையை பின்பற்றுவது அதிக பலனளிக்கும் என அறிவுறுத்தினார்.

# வெட்டிவேர் தொழிற்சாலையில் வேளாண் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்ட நடைமுறைப் பயிற்சி

மதுரை, பிப்.27

ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சியின் ஒரு பகுதியாக, வேளாண் கல்லூரி மாணவர்கள் கருவாடிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள வெட்டிவேர் தொழில்சாலைக்கு சென்றனர். அங்கு அவர்கள் வெட்டிவேரால் மாலைத் தொடுக்கும் முறைகள் குறித்து நேரடி மற்றும் நடைமுறை பயிற்சி பெற்றனர்.



தொழிற்சாலை நிபுணர்கள் வெட்டிவேரின் சாகுபடி, அறுவடை மற்றும் பதப்படுத்தும் செயல் முறைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தனர். மேலும், வெட்டி வேரை மதிப்பூட்டப்பட்ட தயாரிப்பு களாக மாற்றும் முறைகள் மற்றும் அதன் சந்தை வாய்ப்புகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. மாணவர்கள் மாலைத் தொடுக்கும் செயலில் நேரடியாக ஈடுபட்டு அனுபவம் பெற்றனர். இந்த அனுபவம் அவர்களுக்கு கிராமிய தொழில்களின் முக்கியத்துவம், சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவுத் திறன் குறித்து பயனுள்ள புரிதலை அளித்தது.

இத்தகைய நடைமுறைப் பயிற்சிகள், மாணவர்களின் அறிவை விரிவுபடுத்தி, வேளாண்மை சார்ந்த சிறு தொழில்களை முன்னெடுக்க தேவையான தன்னம்பிக்கையை வளர்க்கின்றன.

# வேளாண் மாணவர்கள் நடத்திய 'ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு'



திருச்சி, பிப்.27

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்தில், தனலட்சுமி சீனிவாசன் வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பாக ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (யூபுநிசி 2025-2026) ஒரு பகுதியாக கிராம வரைபடம் மற்றும் வளங்களை விளக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

**முக்கிய அம்சங்கள்**

**வள வரைபடம் :** மாணவர்கள் அந்த கிராமத்தின் முக்கிய நீர்நிலைகள், சாலை வசதிகள், பள்ளிகள் மற்றும் விவசாய நிலங்களை எடுத்துரைத்தனர்.

**விழிப்புணர்வு :** இதன் மூலம் கிராமத்தின் உட்கட்டமைப்பு மற்றும் விவசாய மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் குறித்து பொதுமக்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உள்ளூர் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மாணவர் களின் விளக்கங்களை கேட்டறிந்தனர்.

மாணவர்களின் இந்த ஆக்கப்பூர்வமான முயற்சிக்கு கிராம மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.